**புத்தசாசன நிதியம் - 2018**

---

புத்தசாசன நிதியத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு பணிகள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(3) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பிலான முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) இன் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தினாலும், அந்த நிறுவனம் தொடர்பில் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் எந்தவொரு கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனம் தொடர்பிலான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் பிரகாரம் குறிப்பிடப்படும் கால எல்லைகளினுள் அந்த நிறுவனங்களின் செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், ஆண்டறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய காலங்களில் இடம்பெறுகின்றமையை சான்றுபடுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புடன் செயற்பட வேண்டும். எவ்வாறெனினும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புகள்**

---

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396 | 2013 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 2017 செப்தம்பர் 21 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் நிதியத்தினால் சேகரிக்கப்பட்ட ரூபா 56,864 கூட்டுத்தொகையான 7 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் மேவுகை அங்கீகாரத்திற்கு அமைவாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 8(ஆ) பிரிவு | முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் இலங்கை மத்திய வங்கியில் திறக்கப்பட்டுள்ள நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புகளுக்கு கிடைத்த ரூபா 28,798,412 தொகையான வட்டி வருமானம் மீள முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிய அதிகாரச்சட்டத்தின் 7(ஏ) மற்றும் 14 ஆம் பிரிவுகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் கட்டுப்பாட்டு சபையினால் எடுக்கப்படும் தீர்மானத்தின் பிரகாரம் பொருத்தமான முதலீடுகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்குகளை முடிவுறுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதியத்தின் வருமானம் அதிகரிக்கும் வகையில் குறித்த முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**(ஆ) செயற்படுதன்மை மற்றும் மீளாய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மிகவும் கஷ்டப் பிரதேசங்களிலுள்ள 10 விகாரைகளில் மடாலயங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 10 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு விகாரையிலும் மடாலயமும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் பொத்த அலுவல்கள் திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படும் கணனி கட்டமைப்பின் பிரகாரம் 2020 பெப்ரவரி 10 ஆந் திகதியில் உள்ளபடியாக மடாலயங்கள் இல்லாத அல்லது முழுமைப்படுத்தப்படாத 77 விகாரைகள் அவதானிக்கப்பட்டன. | செயற்திட்டம் கட்டுப்பாட்டுச் சபையின் ஆலோசனைகளின் பிரகாரம் இரத்துச் செய்ய நேர்ந்துள்ளது. | மடாலயங்கள் இல்லாத அல்லது முழுமைப்படுத்தப்படாத விகாரைகளை பூரணப்படுத்தும் தேவைப்பாடு நிறைவு செய்யப்பட வேண்டியமை. |

**(இ)  முகாமைத்துவ தொழிற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மாவட்டத்திற்கு ஒரு சீன மொழி மற்றும் கலாச்சார கற்கை நிறுவனங்களை தாபிக்கும் செயற்திட்டத்தின் முதலாவது கட்டமாக கேகாலை மாவட்டத்தின் தெஹிமடுவ ஸ்ரீ வர்த்தனாராம விகாரையில் கற்கை நிறுவனமொன்று தாபிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தில் 30 பிக்கு மாணவர்களுக்கு ஆரம்ப கட்ட டிப்ளோமாவாக 6 மாதங்கள் படியான இரண்டு பாடநெறிகளை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள ரூபா 210,000 தொகையான மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 05 பிக்கு மாணவர்கள் பாடநெறியை பூர்த்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 257,975 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த பிக்கு மாணவர்கள் 2020 மார்ச் மாதம் வரையிலும் டிப்ளோமா பாடநெறிக்காக ஈடுபடுத்தப்பட்டிராமையால் செயற்திட்டத்தின் உத்தேச நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டம் தோல்வியடைந்த நிகழ்ச்சித்திட்டமான வெளிப்படுத்தப்பட்டதுடன், பிக்குகளை அதிகரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. எனினும் அதனை அடைந்துகொள்ள தவறியமையால் அடிப்படை பாடநெறி நிறைவு செய்யப்பட்டதுடன், அதன் பின்னர் மிகவும் வெற்றிகரமான முறையில் உயர் டிப்ளோமா பாடநெறியொன்று பேலியகொட வித்தியலங்கார பிரிவென் இல் ஆரம்பிக்கக்கபட்டது. அந்த பாரநெறிக்காக மேற்குறிப்பிடப்பட்ட ஆரம்ப பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்கள் இணைத்துக்கொள்ளப் படுவதுடன், தற்போது சீன மொழி மற்றும் கலாச்சார கற்கைகள் உயர் டிப்ளோமா பாடநெறி பேலியகொட வித்தியாலங்கார பிரிவென் இல் வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுகின்றது. | உரிய முறையில் திட்டமிடப்பட்டு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (ii) மீளாய்வாண்டின் நிதியத்தின் மொத்த வருமானம் ரூபா 71,660,296 ஆக இருந்ததுடன், நிதியத்தின் நோக்கங்களுக்காக ரூபா 13,393,495 ஆன செலவினம், அதாவது வருமானத்தில் 19 சதவீதம் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு வருடாந்தம் மிகையான பணம் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஐந்தொகையின் பிரகாரம் மொத்த முதலீடு ரூபா 483,124,345 ஆகும். உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆகிய எந்த மூலத்திலிருந்தும் கிடைக்கும் பணத்தை பெற்றுக்கொள்ளல் மற்றும் புத்தசாசனத்தினை பாதுகாக்கும் மற்றும் போஷிக்கும் நோக்கில் மிகவும் பொருத்தமான பணிகளுக்காக அந்த பணத்தை ஈடுபடுத்தல் நிதியத்தின் பணிப்பொறுப்பான போதிலும், வருடாந்தம் நிதியத்திற்கு கிடைக்கும் வருமானத்திற்கு பொருந்தும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியம் தவறியிருந்தது. | மீளாய்வாண்டின் போது உத்தேச வருமானத்திற்கு பொருந்தும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களுக் காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவான மனதவளம் இல்லாதிருந்தமையால் பெரும்பாலான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியது போயிருந்தது. | பௌத்த சாசனத்தினை பாதுகாத்தல் மற்றும் போஷிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து நிதியத்தினை செயற்திறனான முறையில் பயன்படுத்த வேண்டியமை. |

**(ஈ) பதவியணி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் பொருத்தமான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை இணைத்துக்கொண்டு அவர்களின் ஊதியத்தினை புத்தசாசன நிதியத்திலிருந்து செலுத்தவும் முடியுமா போதிலும், மீளாய்வாண்டின் போது பதவியணி இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>நிதியத்தின் பணிகளுக்காக புத்தசாசன அமைச்சின் 04 உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 998,221 ஆன சம்பளம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | புத்தசாசன அமைச்சிற்கு புறம்பாக உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு செயற்திட்டம் மற்றும் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதிளவான மூலதனமொன்று நிதியத்திடம் காணப்படவில்லை என்பதுடன், வருடாந்த வட்டி வருமானமானது நடைமுறையிலுள்ள செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு போதுமானதாக இருப்பதுடன், பதவியணியை இணைத்துக்கொண்டு சம்பளங்களை செலுத்த வருமானம் போதுமானது அல்ல. கட்டுப்பாட்டுச் சபை தற்போது கிடைக்கும் வட்டிப் பணத்தை எல்லா சந்தர்ப்பங்களிலும் | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | பௌத்த சாசனத்தின் ஸ்திரத்தன்மைக்கு ஈடுபடுத்த ஆலோசனை வழங்கியுள்ளதுடன், நிதியம் மேம்படுத்தப்படும் வரையிலும் அமைச்சிலுள்ள அனைத்து பதவியணிகளினதும் உதவி மற்றும் அவர்களின் செலவினம் அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் தீர்க்கப்படும். எனினும், பணி மேவுகை படிகள் மற்றும் நிர்வாக செலவினம் ஆகியன புத்தசாசன நிதியத்தினால் மேற்கொள்ளப்படும். | |

**(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களுக்கமைய பாதீடொன்றினை தயாரித்து அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டினை உரிய முறையில் தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |